ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1711/23 - 2011 ජුනි 23 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.06.23

*1711/23 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின்படி நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன ஆகிய நான் இச்சபையின் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியளிப்பு 6 செயற்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் புத்தூர் நீர்க் கோபுரம் அமைப்பது தொடர்பாக காணித்துண்டொன்று தேவைப்படுவதனால் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

*தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன,*
*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.*

*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2011, யூன் 14.*
*5/2/1/915.*

**அட்டவணை**

*யாழ்ப்பாண மாவட்டம்,கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் புத்தூர் வடக்கு (J/274) கிராம அலுவலர் பிரிவின் புத்தூர் வடக்கு எனும் கிராமத்திலுள்ள மயானபூமி காணி எனும் காணியின் முழு விஸ்தீரணத்தில் சுமார் 0.06 ஹெக்டேயார் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு :-*

*வடக்கு : மயானபூமிக் காணி ;*
*கிழக்கு : சரளைக்கல் வீதி ;*
*தெற்கு : எடுத்துக்கொள்ளப்படும் காணியின் எஞ்சிய பகுதி மற்றும் புத்தூர் - சுண்ணாகம் வீதி ;*
*மேற்கு : மயான பூமிக் காணியின் எஞ்சிய பகுதி.*

*உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் : தலைவர்,*
*புத்தூர் பிரதேச சபை,*
*கோப்பாய்.*

*7 - 223*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.